ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,867—1969 අගෝස්තු 15 වැනි සිකුරාදා—1969.8.15

14,867 ம் இலக்கம்—1969 ம் ஆண்டு ஒகத்து மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் | 165 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு | — | வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | — |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | — | பலவினமானவை | — |


## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அரசாங்க விடுமுறை தவிர்ந்த ஒவ்வொரு கிழமை நாட்களிலும் 10 மணி தொடக்கம் 4 மணிவரையிலும், போயா தினத்திற்கு முந்திய நாட்களில் 10 மணி தொடக்கம் 1 மணிவரையிலும் அலுவலகம் பொதுசனங்களின் அலுவலுக்குத் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணிவரையிலும், போயா தினத்துக்கு முந்திய நாட்களில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால், அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### "அ" அல்லது "ஆ" பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் "அ" பகுதியின் கீழ் வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் "ஆ" பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் "ஆ" என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.


**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
பதில் அரசாங்க அழுத்தகன்.

# எதிர்ப்பு

**பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினால், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.**

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 30,937. (2) பெற்ற திகதி : 1968 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : பொல/சேரி—கோறு கோபாலன், 562/16, புது பகத்தல வீதி, கொழும்பு ; வியாபாரி. (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது :—. (5) வகுப்பு : 48. (6) வியாபாரச் சரக்கு : சிங்காரிப்புச் வர்க்காரம். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :





ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ம் ஆண்டு பெப்ரவரி மீ 21 ந் உ.
8–710

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 30,817. (2) பெற்ற திகதி : 1968 ம் வருடம் நவம்பர் மாதம் 1 ந் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : டோயோ போசெக்கி கபுஷிக்கி கைஷா (டோயோபோ கம்பனி லிமிரெட் எனவும் வணிகம் செய்பவர்கள், ஜப்பான் சட்டங்களின் அடிப்படையில் முறையாக நிறுவப்பட்ட ஒரு கம்பனி) இல. 8. டொஜிமா ஹமடொரி 2– சோமி, இற்ற – கு, ஒசாக்கா, ஜப்பான் ; உற்பத்தியாளர்களும், வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் முருகேசு அன்டு குலரத்ன, இல. 75, 2/5. ஹேமாஸ் கட்டடம், யோர்க் வீதி, கொழும்பு 1. (5) வகுப்பு : 23. (6) வியாபாரச் சரக்கு : பருத்தித் தையல் நூல்கள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :




வியாபார உரிமை அடையாள இலக்கம் 30,818 பதிவு செய்தால், பதிவு செய்யும் பொழுது இவ்வுரிமை அடையாளத்துடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1969 ம் வருடம் ஜனவரி மாதம் 29 ந் திகதி.
8–829

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

**அட்டவணை—1969**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | .. | 1.8.69 | வெள்ளி | .. | 25.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 8.8.69 | வெள்ளி | .. | 1.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 15.8.69 | வெள்ளி | .. | 8.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 22.8.69 | வெள்ளி | .. | 15.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 29.8.69 | வெள்ளி | .. | 22.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | .. | 5.9.69 | வெள்ளி | .. | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 12.9.69 | வெள்ளி | .. | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 19.9.69 | வெள்ளி | .. | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 26.9.69 | வெள்ளி | .. | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் | .. | 2.10.69 | வியாழன் | .. | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 9.10.69 | வியாழன் | .. | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | | 17.10.69 | வெள்ளி | .. | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | | 24.10.69 | வெள்ளி | .. | 17.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | | 31.10.69 | வெள்ளி | .. | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| நவெம்பர் | .. | 7.11.69 | வெள்ளி | .. | 31.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | | 14.11.69 | வெள்ளி | .. | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | | 21.11.69 | வெள்ளி | .. | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 28.11.69 | வெள்ளி | .. | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| திசெம்பர் | .. | 5.12.69 | வெள்ளி | .. | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 12.12.69 | வெள்ளி | .. | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | | 19.12.69 | வெள்ளி | .. | 12.12.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | | 26.12.69 | வெள்ளி | .. | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு,
1969 ம் ஆண்டு யூன் மீ 13 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது